بسم الله الرحمن الرحيم

# Friday Sermon / வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

## (25 August 2017/ 02 Dhul Hijjah 1438 Hijira)

# SURA QURAYSH (chapter - 106)

## சூரத்து குறைஷின் - குறைஷிகள் (அத்தியாயம் - 106)



**HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM(A)**

சலாமிற்கு பிறகு தஸ்ஹீதும் தஅவசும் அல்.ஃபாத்திஹாவும் ஓதிக்கொண்டு ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹ்மது அஸீம் (அலை) அவர்கள் கீழ்வருமாறு தம் உரையினை ஆரம்பித்தார்.

**1.அளவற்ற அருளாலும் நிகரற்ற அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருப்பெயலால்**

**2.குறைஷிகளுக்கு விருப்பம் உண்டாக்கி,**

**3.மாரி காலத்துடையவும் கோடைகாலத்துடையவும் பிரயாணத்தில் அவர்களுக்கு மனவிருப்பத்தை உண்டாக்கியமைக்காக**

**4.இவ்வீட்டின் (கஅபாவின்) இறைவனை அவர்கள் வணங்குவார்களாக.**

**5.அவனே, அவர்களுக்குப் பசிக்கு உணவளித்தான். மேலும், அவர்களுக்கு அச்சத்திலிருந்தும் அபயமளித்தான்.**

குறைஷிகள் தங்களின் பட்டணத்தை நேசித்திருந்தனர். மக்கா என்னும் அவர்களின் அப்பகுதியைக் குறித்துப் பெருமைக் கொண்டிருந்தனர். “மக்கா” மிக பாதுகாப்பான ஒரு பகுதி என்றும் வர்த்தகத்திற்கும், அதுவாயிலாக அதிகமளவிற்கு லாபத்தைப் பெற்றுக்கொள்வதற்கும் ஏற்ற பகுதி என மக்காவை சார்ந்த மக்களும் அங்கு குடியேறிக்கொண்ட மக்களும் எண்ணியிருந்தனர். அல்லாஹ் அவர்களுக்கு இத்தகைய வசதிகளை அளித்திருந்தான். அத்தோடு ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்கள் மூலம் அல்லாஹ்வின் தூதுச்செய்தியை முதலாவதாக ஏற்றுக்கொள்வதற்கான வாய்ப்பும் அம்மக்களுக்கு கிடைத்திருந்தது. துரதிர்ஷ்டம் என கூறலாம். சிறுபான்மை மக்களுக்கே அதை ஏற்றுக் கொள்வதற்கான பாக்கியம் கிடைத்திருந்தது. பெரும்பான்மை மக்களுக்கும் அந்த நற்செய்தியை மறுத்துக்கொண்டனர். உழைப்பிற்கான ஆற்றல்களும் வர்த்தகத்திறனும் அவர்களுக்கு அளித்திருந்தது யார்? நிச்சயமாக அல்லாஹ் தாம். எந்த ஒரு பகைவனுக்கும் மக்காவில் நுழைய முடியாத நிலையில் அவ்விடத்தை ஒரு

வாணிகப்பகுதியாக நிலைநாட்டிக்கொள்வதற்கான உள்படையான தூண்டுதல்கள் அல்லாஹ் அம்மக்களுக்கு அளித்திருந்தான். இவையாவும் அல்லாஹ் அவர்களுக்கு அளித்திருந்தும் அவர்கள் அல்லாஹ்வின் தூது செய்தியை நிராகரித்து விட்டனர். அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துவதற்கு பதிலாக அவனின் அடையாளங்களையும் அவனின் தூதரையும் அவர்கள் அவமானித்துக் கொண்டனர்.

இந்த சூரத்து நம்மை கற்ப்பிப்பது, இப்பூமியிலிருந்து நாம் பெற்றுக்கொள்ளும் அனைத்து அதிகாரங்களும் செல்வங்களும் அல்லாஹ்வே நமக்கு அளித்துக்கொள்கின்றான் என்றாகும். அவனின்றி நமக்கு எந்த அதிகாரவுமில்லை, அடைக்கலவுமில்லை. ஆகவே அவன் பொழியும் எல்லா அருட்களுக்கும் நாம் அவனிடம் நன்றி செலுத்த வேண்டும். நம் செயல்கள் யாவும் அவனது விருப்பத்திக்கும் மகத்துவத்திற்கும் உகந்தவாறிருக்க வேண்டும்.

## வசனம் - 2

குறைஷி கோத்திரம் என்பது, அரேபியாவில் மிக தலை சிறந்த கோத்திரமாகும். தூயதூதர் முஹம்மது (ஸல்) அவர்கள் அக்கோத்திரத்தைச் சார்ந்தவராகயிருந்தார். மானிட குலத்தின் **“கஆபா”** அவர்களின் கட்டுப்பாட்டில் இருந்தது. “கஆபா” வின் மீதான உரிமையும் அவர்களுக்காகும். அது மூலம் அவர்களுக்கு அதிகமளவிறக்கு பயன்பெற முடிந்தது.

**1.கஆபா எவ்விடத்தில் இருந்தது, அதன் பெருமை மூலம் கோத்திரங்களுக்கு முன் அவர்களுக்கு உயரிய செல்வாக்கு இருந்தது.**

**2.அது (கஆபா) அவர்களின் முக்கியமான பகுதியாகயிருந்ததால் அவர்களுக்கு வாணிகத்தில் முன்னேற்ற மடைய முடிந்தது. அததோடு மற்ற கோத்திரங்களுடன் அவர்களின் நட்ப்பும் அதிகரித்தது. அது அவர்களுக்கு மிக பெரிய அளவில் பயன் அடைவதற்கும் வெகுமதியைப்பெற்றுக் கொள்வதற்கும் துணைப்புரிந்தது.**

**3.அரபிகளின் கலாச்சாரத்தன்மை காரணமாக மக்கா பகுதி புனிதமாக எண்ணப்பட்டிருந்தது. அதன் பலனாக அவ்விடம் போர் மூலமோ விவாதங்கள் மூலமோ அதாவது தனிப்பட்ட முறையிலான வாக்குவாதங்கள் மூலமோ அழயாமலிருந்தது.**

அதுகாரணமாக குறைஷிகள் மிக பாதுகாப்பாகயிருந்தனர். அபாயங்களைக்குறித்து அவர்களுக்கு அஞ்சதேவையில்லாமலிருந்தது. அவர்கள் இந்த புனிதமான கோவிலின் அதாவது, கஆபாவின் சேவகர்களாகயிருந்தனர். அதன் காரணமாக அவர்களுக்கு மிக பெரிய மரியாதை அளிக்கப்பட்டிருந்தது. இந்த மரியாதையும் இப்பதவியும் அவர்கள் அல்லாஹ்வுக்கு அர்ப்பித்தனர். ஆனால் அல்லாஹ் அவனது அடையாளங்களை வெளிப்படுத்திக்கொள்ளவும் அவனது செய்தியை எட்டவைத்துக் கொள்ளவும் செய்த போது, அல்லாஹ்வின் ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்டு, அவனது தூதர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டிய முதல்கடமை அவர்களுக்கல்லவா? பொதுவாக நிகழும் அபாயச் சூழ்நிலைகளில் “கஅபா”வை பராமரிப்பவர்கள் என்ற நிலையில் தங்களின் மரியாதையையும் செல்வாக்கையும் அவர்களுக்கு தக்கவைத்துக்கொள்ள முடிந்தது. சிறிய, போர்ஷியா, எமன், அபீசீனியா போன்ற இராஜியங்களுடன் அவர்கள் உடன் படிக்கையில் ஏற்பட்டனர். இது மூலம் அவர்களின் உயிருக்கும், சொத்துக்கும், வாணிகத்துக்கும்

பாதுகாப்பு கிடைத்தது. எல்லாகாலங்களிலும் எந்நேரவும் அவர்களுக்கு பாதுகாப்புடன் பயணம் மேற்கொள்ள முடிந்தது.

## வசனம் - 3

வியாபாரத்திற்காக அவர்களக்கு பயணம் மேற்க்கொள்ள வேண்டியதாகயிருந்தது. குளிர்காலங்களில் அவர்கள் எமனை போன்ற கோடைகால நாடுகளில் பணம் மேற் கொண்டிருந்தனர். கோடைகாலங்களில் குளிர்கால நாடுகளான சிறியா போன்ற துணைதீவுகளிலும் பயணம் புரிந்திருந்தனர். இப்பயணம், அவர்களின் வாணிகத்திறனும் அறிவும் முழுமையடைய காரணமாயிருந்தது. உலகத்தைக்குறித்து மேலும் உணாந்துக்கொள்ள அவர்களுக்கு முடிந்தது. அவர்களின் உணர்ச்சி, சொல்திறன் போன்றவையை வெளிப்படுத்திக்கொள்வதற்கும், சாகித்தியத்தின் மீதும் மற்று கலைகளின் மீதுமான அவர்களின் திறனை அதிகரித்துக்கொள்வதற்கும் அவர்களுக்கு முடிந்தது.

## வசனம் - 4

**(இவ்வீடு என்பதால் இங்கு பொருளாக்கப்பட்டிருப்பது, "கஅபா" ஆகும்)**

## வசனம் - 5

வர்த்தக சங்கங்கள் (இதர ராஜியங்களிலிருந்து வருகை தந்தவர்கள்) அவர்களை (மக்காவை சார்ந்த மக்களை) வளப்படுத்திக்கொள்ளவும், மக்காவுடான வர்த்தகத்திற்கு மற்று நாடுகளை அது ஈர்த்துக்கொள்ளவும் செய்தது. மிக தொலைவிலான இராஜ்யங்களிலிருந்து வருகை தந்த மக்கள்

நவீன பொருட்களும் பரிசுகளும் கொண்டு வந்தனர். இவையாவும் மக்காவை மேலும் முன்னேற்றமடையச்செய்தது. அவர்களின் மனைகளில், அவர்கள் பத்திரமாகயிருந்தனர். போர்களின் தீங்குகளுக்கு அவர்கள் ஆளாகிகொள்ளவுமில்லை. இத்தகைய முன்னேற்றங்கள் அல்லாஹ் அளித்துக்கொண்டதனாலாகும், அல்லாஹ்வை மட்டும் வணங்குவதற்கு அவன் அவர்களுக்கு கட்டளை விடுத்ததும், அவனிடம் நன்றிக்கெட்டவர்களாக இருக்கக்கூடாது எனக்கூறிக்கொண்டதும்! காரணம் அந்த அருட்கள்யாவும் அவர்களுக்கு அளித்தது அவன் மட்டுமானவன்.

நிச்சயமாகவும் சிந்திக்கின்ற மக்களுக்கு இதில் மிகப்பெரிய படிப்பினை உள்ளன. அவனை நினைவுக்கொள்வதற்கு நமக்கு அவன் உதவி புரிவானாக! அவனிடம் நன்றி கெட்டவராகயிருக்காமல் இருப்பதற்கும் அவன் உதவி புரிவானாக! அவன் நமக்காக மாபெரும் அருள்களை பொழிந்திருக்கின்றான் (முஹம்மதியா உம்மத்திற்கு). நான் இந்த விளக்கத்தை நிறைவுபடுத்துகின்றேன். இறைவன், அனைவர்களின் மீதும் அருள்மொழிவானாக! ஆமீன்.


**Issued by:**

Jamaat Ul sahih Al Islam

Dawa Department
Tamil Nadu, India
**Cell:** 7339689239
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817